# சக்கர வியுகம்

தினசரி புலனாய்வு நாளிதழ்

SAKKRA VIYUGAM

www.sakkraviyugam.com | TNTAM/25/A1018 | sakkraviyugam2025@gmail.com

VOLUME : 01 | ISSUE: 194 | 07.1.2026 | WEDNESDAY | MARGAZHI : 24 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 194 | 07.1.2026 | புதன்கிழமை | மார்கழி : 24 | விலை : ரூ.5/–


# திருப்பரங்குன்றம் மலை உச்சியில் தீபம் ஏற்றலாம்

## தனி நீதிபதி உத்தரவை உறுதி செய்து ஐகோர்ட் தீர்ப்பு

மதுரை, ஜன.7-

திருப்பரங்குன்றம் மலை உச்சியில் தீபத் தூணில் தீபம் ஏற்றும் விவகாரத்தில் தனி நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் பிறப்பித்த உத்தரவு செல்லும். இதனை எதிர்த்த மேல் முறையீட்டு மனுக்கள் முடித்து வைக்கப்படுகின்றன. எனவே, தனி நீதிபதி உத்தரவின்படி திருப்பரங்குன்றம் மலை உச்சியில் உள்ள தீபத் தூணில் தீபம் ஏற்ற வேண்டும். இதை மதுரை மாவட்ட ஆட்சியர் மேற்பார்வையிட வேண்டும் என்று உயர் நீதிமன்ற மதுரைக் கிளை தீர்ப்பளித்துள்ளது.

மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் மலை உச்சியில் கார்த்திகை தீபம் ஏற்ற வேண்டும் என தனி நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் உத்தரவிட்டார். இந்த உத்தரவை எதிர்த்து தமிழக அரசு, மதுரை மாவட்ட நிர்வாகம், அறநிலையத் துறை, சிக்கந்தர் தர்கா நிர்வாகம் உட்பட 26 மேல்முறையீட்டு மனுக்கள்



தாக்கல் செய்யப்பட்டன.

இந்த மனுக்கள் அனைத்தையும் நீதிபதிகள் ஜி.ஜெயச்சந்திரன், கே.கே. ராமகிருஷ்ணன் அமர்வு விசாரித்து வந்தது.

தனி நீதிபதியின் உத்தரவுக்கு எதிரான மேல்முறையீட்டு வழக்கில் (ஜன.6) தீர்ப்பு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி, தனி நீதிபதி உத்தரவு செல்லும் என்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதோடு, தீபம் ஏற்றுவதற்கான சில வழிகாட்டுதல்களையும் நீதிமன்றம் வழங்கியுள்ளது.

நீதிபதிகள் தீர்ப்பின் விவரம் வருமாறு: 1996 நீதிமன்ற உத்தரவில் உச்சிப்பிள்ளையார் கோயிலிலும் மாற்று இடத்திலும் தீபம் ஏற்றலாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தத் தீர்ப்பை பின்பற்றி தேவஸ்தானம் மலை உச்சியில் உள்ள கல்தூண் எனக் கூறப்படும் தீபத் தூணிலும் தீபம் ஏற்ற வேண்டும். இதற்கு மத்திய தொல்லியல் துறையிடம் உரிய அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும்.

திருப்பரங்குன்றம் விவகாரத்தில் பொது அமைதிக்கு பிரச்சினை ஏற்பட தமிழக அரசே காரணம். தீபத் தூண் விவகாரத்தில் அரசு, அரசியல் காரணங்களோடு செயல்பட்டுள்ளது. தீபத் தூண் தேவஸ்தான இடத்திலேயே உள்ளது. திருப்பரங்குன்றம் மலையில் இருப்பது தீபத் தூண்தான்.

எனவே, தனி நீதிபதி பிறப்பித்த உத்தரவு செல்லும். மேல் முறையீடு மனுக்கள் முடித்து வைக்கப்படுகின்றன. தனி நீதிபதி உத்தரவுப்படி தீபத் தூணில் தீபம் ஏற்ற வேண்டும். இதை மதுரை மாவட்ட ஆட்சியர் மேற்பார்வையிட வேண்டும்.

ஆனால், தீபத் தூணில் தனிநபர்கள் தீபம் ஏற்ற அனுமதிக்க முடியாது. தேவஸ்தானம், மாவட்ட நிர்வாகம், காவல் துறையினர்தான் தீபம் ஏற்ற வேண்டும்.

தனி நபர்கள், அரசியல் கட்சியினர், அரசியல் இயக்கத்தினர் யாரும் அங்கு தீபம் ஏற்றச் செல்ல கூடாது. தேவஸ்தானம் மட்டுமே செல்ல வேண்டும். ஒவ்வொரு கார்த்திகையிலும் தீபம் ஏற்றுவதை உறுதி செய்ய வேண்டும். இவ்வாறு நீதிபதிகள் உத்திரவில் கூறியுள்ளனர்.







# காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா மருத்துவமனையில் அனுமதி



டில்லி, ஜன,7-

காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா உடல் நலக்குறைவால், டில்லியில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளார். காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா டில்லியில் உள்ள கங்கா ராம் மருத்துவமனைக்கு உடல்நலக்குறைவு காரணமாக அழைத்து வரப்பட்டார். அவர் வழக்கமான பரிசோனைக்கு அழைத்து வரப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. ஆனால் பரிசோதித்த டாக்டர்கள், மருத்துவமனையில் இருந்து சிகிச்சை பெறுமாறு அறிவுறுத்தினர். தற்போது மருத்துவமனையில் சோனியா அனுமதிக்கப்பட்டு உள்ளார். அவருக்கு அங்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. டாக்டர்களின் தீவிர கண்காணிப்பில் சோனியா இருக்கிறார். உடல் நலத்தில் பெரிய பிரச்னை ஏதும் இல்லை. சிகிச்சைக்கு பிறகு அவர் டிஸ்சார்ஜ் செய்யப்படுவார் என மருத்துவமனை வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன.

# நான் இன்னும் அதிபர் தான்; அமெரிக்க நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது மதுரோ உறுதி




வாஷிங்டன், ஜன.7-

போதைப்பொருள் குற்றச்சாட்டுகளில் நான் குற்றவாளி அல்ல. நான் இன்னும் ஒரு நாட்டின் ஜனாதிபதி தான் என அமெரிக்க நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது அதிபர் மதுரோ தெரிவித்துள்ளார். வெனிசுலாவில் கடந்த 15 ஆண்டுகளாக ஆட்சியில் இருப்பவர் தான் மதுரோ. இவர் பஸ் டிரைவர் ஆக இருந்து, தற்போது அதிபர் ஆக உயர்ந்து இருக்கிறார். இவரையும், இவரது மனைவியையும் அமெரிக்க படைகள் கைது செய்து நாடு கடத்தியது. தற்போது அவர்கள் புரூக்ளின் சிறையில் அடைக்கப்பட்டனர். இந்த சூழலில், டிரம்ப் அரசு அவர் மீது போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ள நிலையில், அது தொடர்பான வழக்குகள் நடைபெற்றது. நியூயார்க் நீதிபதி முன்பு ஆஜரான நிக்கோலஸ் மதுரோ, தனது கைதுக்கு எதிர்ப்பு தெரிவித்து இருக்கிறார்.

நீதிமன்றத்தில் மதுரோ பேசுகையில், ''போதைப்பொருள் குற்றச்சாட்டுகளில் நான் குற்றவாளி அல்ல. நான் இன்னும் ஒரு நாட்டின் ஜனாதிபதி தான். நான் நிரபராதி. நான் ஒரு கண்ணியமான மனிதன். என்னைச்சிறை பிடித்துவிட்டனர்'' என தெரிவித்தார். போதைப்பொருள் மற்றும் ஆயுதக் குற்றச்சாட்டுகளில் குற்றமற்றவர்கள் என மதுரோவும், அவரது மனைவியும் திட்டவட்டமாக தெரிவித்து இருக்கின்றனர். இந்த வழக்கில் இதுவரை நீதிபதி ஆல்வின் ஹெலெர்ஸ்டைன் எந்த உத்தரவும் பிறப்பிக்கவில்லை.

# ''முருக பக்தர்களுக்கு கிடைத்துள்ள மாபெரும் வெற்றி''

## திருப்பரங்குன்றம் தீர்ப்புக்கு எல். முருகன் வரவேற்பு



சென்னை: ஜன.7-

திருப்பரங்குன்றம் தீபத்தூணில் தீபம் ஏற்றலாம் என்று சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளை அளித்துள்ள தீர்ப்பு, முருக பக்தர்களின் உணர்வுக்கு கிடைத்துள்ள மாபெரும் வெற்றி என்று மத்திய இணை அமைச்சர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

திருப்பரங்குன்றம் முருகன் கோயிலில் உள்ள தீபத் தூணில் தீபம் ஏற்றலாம் என நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன் அளித்த தீர்ப்பை, இரு நீதிபதிகள் அடங்கிய அமர்வு உறுதிப்படுத்தி உள்ளது. இதை வரவேற்று மத்திய இணை அமைச்சர் எல். முருகன் வெளியிட்டுள்ள அறிக்கையில், ''திருப்பரங்குன்றம் தீபத்தூணில் தீபம் ஏற்ற வேண்டும் என்ற நீதிபதி ஜி. ஆர். சுவாமிநாதனின் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை, சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளை இன்று உறுதிபடுத்தியிருப்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன்.


திருப்பரங்குன்றம் மலை மீது அமைந்துள்ள தீபத்தூணில், கோயில் நிர்வாகத்தினருடன் இணைந்து தீபம் ஏற்றலாம் என்று, ஒரு மாத காலத்துக்கு முன்பு நீதிமன்றம் தீர்ப்பளித்தும், அந்த தீர்ப்பிற்கு மதிப்பளிக்காமல் இந்து சமுதாய மற்றும் முருக பக்தர்களின் நம்பிக்கையை புண்படுத்தும் விதமாக நடந்து கொண்டது அறநிலையத்துறை. மேலும், பக்தர்களின் மீதும் இந்து அமைப்புகளைச் சேர்ந்த தலைவர்கள் மீதும், காவல்துறையை வைத்து அராஜக போக்கினை கட்டவிழ்த்துவிட்டு வேடிக்கை பார்த்தது தமிழக அரசு.

இந்து சமய அறநிலையத்துறை என்ற பெயரை வைத்துக்கொண்டு, கடந்த சில காலமாக இந்து சமய மக்களுக்கு எதிரான அறமற்ற துறையாகவே செயல்பட்டு வந்துள்ளது. ஆனால், இன்று சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளை வழங்கியுள்ள தீர்ப்பானது, தமிழக அரசுக்கும் அறநிலையத்துறைக்கும் குட்டு வைக்கும் விதமாக அமைந்துள்ளது. தீபத்தூண், தர்காவுக்கே சொந்தம் என்ற அறநிலையத்துறையின் அறமற்ற வாதம் சிறுப்பிள்ளைத் தனமானது என்று கூறியிருப்பதுடன், சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்படும் என்று தமிழக அரசு கூறுவதை அபத்தம் என்றும் கடுமையாக சாடியுள்ளது.

முருக பக்தர்களுக்கும், இந்து சமுதாய மக்களுக்கும், தீபத்தூணில் தீபம் ஏற்ற வேண்டும் என்பதை கோரிக்கையாக வைத்து தனது இன்னுயிரை மாய்த்துக் கொண்ட தீவிர முருக பக்தரான அமரர் பூரணச்சந்திரனின் தியாகத்துக்கும் உரிய நீதியை இன்றைய நீதிமன்ற தீர்ப்பு வழங்கியுள்ளது. இது வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பு. முருக பக்தர்களின் உணர்விற்கு கிடைத்துள்ள மாபெரும் வெற்றி.

இதற்குப் பிறகாவது ஆட்சி அதிகாரத்தை தவறான முறையில் பயன்படுத்துவதை விடுத்து, வருடந்தோறும் கார்த்திகை தீப நாளன்று, தீபத்தூணில் தீபம் ஏற்ற வேண்டும் என்ற சென்னை உயர் நீதிமன்ற உத்தரவினை பின்பற்றுமாறு திமுக அரசை வலியுறுத்துகிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

# வெனிசுலாவில் அமெரிக்கா நடத்திய தாக்குதலில் 32 கியூபா அதிகாரிகள் உயிரிழப்பு



ஹவானா, ஜன.7-

வெனிசுலாவில் நடந்த அமெரிக்க ராணுவ நடவடிக்கையின்போது தங்களது நாட்டைச் சேர்ந்த 32 அதிகாரிகள் கெ௶ல்லப்பட்டதாக கியூபா அதிகாரப்பூர்வமாக தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வெளியிடப்பட்ட அறிக்கையில்'' வெனிசுலா அரசாங்கத்தின் கோரிக்கையின் பேரில் கியூபாவின் ராணுவ மற்றும் காவல் துறை அதிகாரிகள் பல ஆண்டுகளாக அங்கு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த நிலையில் வெனிசுலாவை சுற்றிவளைத்து அமெரிக்கா நடத்திய திடீர் தாக்குதலில் 32 கியூபா அதிகாரிகள் உயிரிழந்தனர்'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் ஏர் போர்ஸ் ஒன் விமானத்தில் புளோரிடாவிலிருந்து வாஷிங்டனுக்கு ஞாயிற்றுக்கிழமை பயணம் செய்த போது செய்தியாளர்களிடம் கூறுகையில், "நேற்று (சனிக்கிழமை) கியூபா மற்றும் வெனிசுலாவைச் சேர்ந்த நிறைய பேர் கொல்லப்பட்டனர் என்பது உங்களுக்கு தெரியும். ஆனால், எங்கள் தரப்பில் எந்த உயிரிழப்பும் இல்லை'' என்றார்.

# எல்லாம் புகழும் முருகனுக்கே... திருப்பரங்குன்றம் தீப வழக்கின் மனுதாரர் ராம ரவிக்குமார் மகிழ்ச்சி



திருப்பரங்குன்றம், ஜன.7-

திருப்பரங்குன்றம் மலை தீபத்தூணில் கார்த்திகை தீபம் ஏற்ற வேண்டும் என்ற நீதிபதி ஜி.ஆர்.சுவாமி நாதன் தீர்ப்பை இரு நீதிபதிகள் அமர்வு உறுதி செய்த நிலையில், ''எல்லாம் புகழும் முருகனுக்கே...'' என வழக்கின் மனுதாரர் ராம ரவிக்குமார் மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

திருப்பரங்குன்றம் வழக்கின் மனுதாரர் ராம ரவிக்குமார் நிருபர்களிடம் கூறியதாவது: இந்த வழக்கில் வாதாடிய அனைத்து வழக்கறிஞர்களுக்கும் நன்றி தெரிவித்து கொள்கிறேன்.

தினசரி இந்த விஷயத்தை உலகிற்கு தெரிவித்த பத்திரிகையாளர்கள் அனைவருக்கும் நன்றிகள், வாழ்த்துக்கள். இந்த வழக்கு முருகன் அருளால் வெற்றிஅடைந்து இருக்கிறது. இந்த வெற்றி நிச்சயமாக மேலும் தொடரும் என்று நம்புகிறோம். அவதூறுகள்

இந்த வெற்றிக்காக போராடிய உள்ளூர் மக்கள், என்னை வெளியூர்காரர் என்று சொன்னார்கள். நான் மதுரைக்காரன் தான். உள்ளூர்காரன், வெளியூர்காரன் என்று பொய் வாதம் பரப்பினார்கள். வழக்கு தொடுத்தவர் மீதும், வழக்கிற்கு நீதி சொன்ன நீதிபதி மீதும் அவதூறு பரப்பினார்கள். நாங்கள் நீதிமன்றத்தின் உத்தரவை மதித்து, சட்டத்தின் பிள்ளையாக எந்தவித வார்த்தைகளையும் பேசவில்லை. இந்த நீதிமன்றம் இன்று தீர்ப்பு கொடுத்து இருக்கிறது. நீதிமன்றங்களின் உத்தரவுகளை நாங்கள் மதிக்கிறோம். மனசாட்சி

இந்த வெற்றியை திருப்பரங்குன்றம் மலை மீது உச்சியில் தீபம் ஏற்ற வேண்டும் என்பதற்காக போராடிய, திருப்பரங்குன்றம் மக்களுக்கும், இதற்கு முன்பு பலியான, எங்களது ஐயா ராஜகோபால், காளிதாசன், பரம சிவன் உள்ளிட்டோருக்கும் , இந்த நீதிமன்றம் உத்தரவை அமல்படுத்த வேண்டும் என்று தன்னுடைய உடலை இறைவனுக்கு அர்ப்பணித்த பூரண சந்திரனுக்கும் சமர்ப்பிக்கிறோம். எங்கள் பணி நிச்சயமாக தொடரும். அவதூறு பரப்பியவர்கள் மனசாட்சி படி நடந்து கொள்ளுங்கள்.

முருகனுக்கே

எல்லாவற்றையும் முருகன் பார்த்து கொண்டு இருக்கிறார். அவூதூறு பரப்பியவர்கள், அலட்சியமாக பேசியவர்கள், எங்களை அவமானம் படுத்தினீர்கள். அந்த அவமானங்கள் எல்லாத்தையும் அடித்து, உடைத்து, தகர்த்த முருகன் எங்களுக்கு வெகுமானம் தந்து இருக்கிறார். எல்லாம் புகழும் முருகனுக்கே, எல்லாம் புகழும் முருகனுக்கே, எல்லாம் புகழும் முருகனுக்கே. தமிழக அரசு அனைத்து மக்களுக்கு சாதகமாக இருக்க வேண்டும். மதச்சார்பற்ற அரசு ஆனால் ஹிந்துக்களுக்கு மட்டும் விரோதமாக இருந்தது.

சட்டத்தின் படி

தர்காவுக்கு 15 மீட்டர் தள்ளி தீபம் ஏற்றி கொள்ளலாம் என்று நீதிமன்ற தீர்ப்பு இருந்தும் மலை உச்சியில் தீபம் ஏற்றுவதால் சமூக நல்லிணக்கம் கெட்டு போய்விடும் என்று சொன்னார்கள். ஹிந்துக்கள் யாரும் முஸ்லிம்களுக்கு எதிராக இல்லை. நீதிமன்றம் உத்தரவு கொடுத்த போதும் கூட நாங்கள் சட்டத்தின்படி தான் மதித்து போனோம். அப்படி இருக்கும் பட்சத்தில், மேல்முறையீடு என்று சொல்லி நீதிமன்ற உத்தரவுக்கு எதிராக வாதிட்டு, கோவிலுக்கு எதிராக, கடவுளுக்கு எதிராக, சமயத்திற்கு எதிராக வழக்கு நடத்தினர். இது ஏற்கத்தக்கது அல்ல. மக்களிடம் வெறுப்புணர்வை இந்த அரசு சம்பாதித்து இருக்கிறது. இவ்வாறு ராம ரவிக்குமார் கூறினார்.

# முதல் மாசு கட்டுப்பாட்டு கப்பல் 'சமுத்திர பிரதாப்' நாட்டுக்கு அர்ப்பணித்தார் மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங்



புதுடெல்லி, ஜன.7-

உள்நாட்டிலேயே கட்டப்பட்ட முதல் மாசுக் கட்டுப்பாட்டு கப்பலான 'சமுத்திர பிரதாப்' சேவையை கோவாவில் பாதுகாப்பு துறை அமைச்சர் ராஜ்நாத்சிங் நேற்று நாட்டுக்கு அர்ப்பணித்து வைத்தார்.

அப்போது ராஜ்நாத் சிங் பேசியதாவது: நாட்டின் முதல் மாசு கட்டுப்பாட்டு கப்பலை கோவா ஷிப்யார்டு நிறுவனம் (ஜிஎஸ்எல்) கட்டமைத்துள்ளது. 114.5 மீட்டர் நீளமுள்ள இந்த கப்பலில் 60 சதவீதத்துக்கும் அதிகமாக உள்நாட்டு பொருட்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. 4,200 டன் எடையுள்ள இந்த கப்பல் 22 நாட்டிக் கல்லுக்கும் அதிகமான வேகத்தில் 6,000 நாட்டிக்கல் மைல்கள் வரை பயணிக்கும் திறனை உள்ளடக்கியுள்ளது.

கடல்சார் மாசுக் கட்டுப்பாட்டு விதிமுறைகளை அமல்படுத்துதல், கடல்சார் சட்ட அமலாக்கம், தேடல், மீட்புப் நடவடிக்கை மற்றும் இந்தியாவின் பிரத்தேயக பொருளாதார மண்டலத்தை பாதுகாத்தல் ஆகிய பணிகளுக்கு இந்த கப்பல் ஒரு முக்கிய தளமாக செயல்படும்.

இந்தியாவில் கட்டப்பட்ட மிகப்பெரிய மற்றும் மிகவும் மேம்பட்ட மாசுக் கட்டுப்பாட்டுக் கப்பலான சமுத்திர பிரதாப், நாட்டின் கப்பல் கட்டும் சிறப்புக்கும், தூய்மையான, பாதுகாப்பான மற்றும் தற்சார்பு கொண்ட கடல்சார் எதிர்காலத்துக்கான நீண்டகால தொலைநோக்குப் பார்வைக்கும் ஒரு சான்றாகத் திகழ்கிறது. இவ்வாறு ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கோவா முதல்வர் பிரமோத் சாவந்த், மத்திய பாதுகாப்புத் துறை செயலாளர் ராஜேஷ் குமார் சிங், இந்திய கடலோர காவல் படை தலைமை இயக்குநர் பரமேஷ் சிவமணி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

துணை ஆய்வாளர் ஜெனரல் அசோக் குமார் பாமா தலைமையில் இயங்கும் இந்த கப்பல் கொச்சியில் நிலைநிறுத்தப்பட உள்ளது. இதில், 14 அதிகாரிகள் மற்றும் 115 பணியாளர்கள் அடங்கிய குழு உள்ளது. இந்தக் குழுவில் ஆண்களுக்கு இணையாகப் பணியாற்றும் முதன்முதலாக இரண்டு பெண் அதிகாரிகளின் நியமனமும் அடங்கும் என்று இந்திய கடலோர காவல் படை தெரிவித்துள்ளது.

# சீனாவை பின்னுக்கு தள்ளி அரிசி உற்பத்தியில் இந்தியா முதலிடம்



புதுடெல்லி, ஜன.7-

சீனாவை மிஞ்சி உலகின் மிகப் பெரிய அரிசி உற்பத்தி நாடாக இந்தியா மாறியுள்ளது என மத்திய வேளாண்துறை அமைச்சர் சிவராஜ் சிங் சவுகான் தெரிவித்துள்ளார். புதிய வகை பயிர்களை வெளியிடும் நிகழ்ச்சி டெல்லியில் நடைபெற்றது.

இதில் 25 பயிர்களின் 184 புதிய வகை களை அமைச்சர் சவுகான் வெளியிட்டார். இதில் 122 தானியங்கள், 24 வகை பருத்தி, 13 வகை எண்ணெய் வித்துக்கள், 11 வகை மாட்டுத் தீவனங்கள், பருப்பு மற்றும் கரும்பில் தலா 6 வகைகள், சணல் மற்றும் புகையிலையில் தலா 1 வகையையும் அவர் வெளியிட்டார்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் சிவராஜ் சிங் சவுகான் பேசியதாவது: இந்த புதிய வகை வித்துக்கள், விவசாயிகளுக்கு அதிக மகசூல், அதிக வருவாய் தரக்கூடியவை. இந்த புதிய வகை பயிர்கள் விவசாயிகளிடம் விரைவில் சென்றடைவதை வேளாண் அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும்.

அரிசி உற்பத்தியில் சீனாவை மிஞ்சி இந்தியா மிகப் பெரிய நாடாக உருவெடுத்துள்ளது. கடந்த 202425ம் ஆண்டில் இந்தியா 150.18 மில்லியன் டன் அரிசி உற்பத்தி செய்தது. இதே காலத்தில் சீனாவின் அரிசி உற்பத்தி 145.28 மில்லியன் டன்களாக இருந்தன. இவ்வாறு அவர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் தேசிய விதைகள் கார்ப்பரேஷன் (என்எஸ்சி) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் டாக்டர் மனீந்தர் கவுர் திவிவேதி, என்எஸ்சியின் கடந்தாண்டின் இறுதி ஈவுத் தொகை ரூ.33.26 கோடிக்கான காசோலையை வழங்கினார்.

# கர்நாடக முதல்வராக அதிக நாட்கள் ஆட்சி செய்து சித்தராமையா சாதனை



பெங்களூரு, ஜன.7-

கர்நாடகாவை அதிக நாட்கள் ஆட்சி செய்த முதல்வர் என்ற சாதனையை சித்தராமையா படைத்துள்ளார். இதன் மூலம் முன்னாள் முதல்வர் தேவராஜ் அர்ஸின் சாதனையை அவர் முறியடித்துள்ளார்.

கடந்த 35 ஆண்டுகளாக கர்நாடக மாநிலத்தின் வரலாற்றில் அதிக நாட்கள் முதல்வராக ஆட்சி செய்தவர் என்ற பட்டியலில் தேவராஜ் அர்ஸ் முதலிடத்தில் இருந்தார். அவர் 1972, 1978 ஆகிய ஆண்டுகளில் நடந்த தேர்தல்களில் தொடர்ச்சியாக வென்று 2,789 நாட்கள் (7 ஆண்டுகள் 6 மாதங்கள்) முதல்வராக பதவி வகித்தார். அவருக்கு அடுத்த இடத்தில் நிஜலிங்கப்பா 7 ஆண்டுகள் 175 நாட்கள் முதல்வராக இருந்தார்.

இந்நிலையில், தற்போதைய முதல்வர் சித்தராமையா ஜனவரி 6ம் தேதியுடன் தேவராஜ் அர்ஸ் பதவியில் இருந்த நாட்களை சமன் செய்கிறார். ஜனவரி 7ம் தேதியுடன், அதிக நாட்கள் கர்நாடகாவை ஆண்ட முதல்வர் என்ற தேவராஜ் அர்ஸின் சாதனையை முறியடிக்கிறார். ஜனவரி 7ம் தேதிக்கு பின்னர் அதிக நாட்கள் கர்நாடகாவை ஆட்சி செய்த முதல்வர் என்ற பெருமை சித்தராமையாவை வந்தடையும்.

# கட்சி அவைத்தலைவருக்கு 'பளார்'; திமுக எம்எல்ஏ அடாவடி



திருவள்ளூர், ஜன.7-

கோலப்போட்டியில் பங்கேற்க வந்த கும்மிடிப்பூண்டி தி.மு.க., எம்.எல்.ஏ., கோவிந்தராஜன், கட்சியைச் சேர்ந்த ஒன்றிய அவைத்தலைவரை கன்னத்தில் அறைந்தது, பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி தி.மு.க., எம்.எல்.ஏ.,வாக இருப்பவர் கோவிந்தராஜன். திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலராக இருந்த இவரின் பதவி கடந்தாண்டு பறிக்கப்பட்டு, மீஞ்சூர் ஒன்றிய செயலராக இருந்த ரமேஷ்ராஜாவிடம் வழங்கப்பட்டது. அப்போது முதல், இருவரும் இரண்டு கோஷ்டிகளாக செயல்பட்டு வந்தனர். கோலப்போட்டி

ஒருவர் பங்கேற்கும் நிகழ்ச்சியை மற்றொருவர் தவிர்ப்பதும், வெவ்வேறு நேரங்களில் வருவதுமாக இருந்தனர். இதனால் தி.மு.க.,வினர் யார் பக்கம் செல்வது என தெரியாமல், விழிபிதுங்கி இருந்தனர்.

இந்நிலையில், பெரியபாளையம் அடுத்த, குமரப்பேட்டையில் நேற்று, கட்சி சார்பில் கோலப்போட்டி நடந்தது. இதில் எம்.எல்.ஏ., கோவிந்தராஜன், மாவட்ட பொறுப்பாளர் ரமேஷ்ராஜா மற்றும் கட்சி பிரமுகர்கள் பங்கேற்றனர். நிகழ்ச்சி முடிவில், எல்லாபுரம் தெற்கு ஒன்றிய அவைத்தலைவர் முனிவேல், எம்.எல்.ஏ., கோவிந்தராஜனிடம் சென்று, 'ஒன்றியத்தில் நடக்கும் கட்சி விழா குறித்து தனக்கு எதுவும் தெரிவிப்பதில்லை' என கூறியுள்ளார்.

இதில் இருவருக்கும் இடையே வாக்குவாதம் நடந்தது. ஆத்திரமடைந்த எம்.எல்.ஏ., கோவிந்தராஜன், முனிவேல் கன்னத்தில், 'பளார், பளார்' என அறைந்தார். இதனால் அப்பகுதியில் பதற்றமான சூழல் நிலவியது. அவைத்தலைவர் முனிவேல், மாவட்ட பொறுப்பாளரின் ரமேஷ்ராஜாவின் ஆதரவாளர் என்பது குறிப்பிடத்தக்கது. கருப்பு கொடி ஆர்ப்பாட்டம்

கோலப்போட்டி விழாவில் ஒன்றிய அவைத்தலைவரை, கன்னத்தில் அறைந்த எம்.எல்.ஏ., கோவிந்தராஜனை கண்டித்து, திருநிலை கிராமத்தில், முனிவேலின் ஆதரவாளர்கள் கறுப்பு கொடி ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். 'தி.மு.க., தலைமை, இப்பிரச்னையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையெனில் வரும் சட்டசபை தேர்தலில் இதன் பலன் எதிரொலிக்கும்' என கோஷமிட்டனர். சட்டசபை தேர்தல் விரைவில் நடைபெற உள்ள நிலையில், தி.மு.க.,வில் நடக்கும் கோஷ்டி மோதல்கள், கட்சியினர் மத்தியில் கலக்கத்தை ஏற்படுத்தி உள்ளது.

# கரூர் நெரிசல் சம்பவம்: ஜன.,12ல் விஜய் நேரில் ஆஜராக சிபிஐ சம்மன்

சென்னை, ஜன.7-

கரூர் நெரிசல் சம்பவம் வழக்கில், தவெக தலைவர் விஜய் ஜனவரி 12ம் தேதி நேரில் ஆஜராக சிபிஐ சம்மன் அனுப்பி உள்ளது.



கடந்த செப்., 27ல், கரூரில் த.வெ.க., தலைவர் விஜய் பங்கேற்ற கூட்ட நெரிசலில் சிக்கி, 41 பேர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக, சி.பி.ஐ., அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர். கரூர் கலெக்டர் தங்கவேல், எஸ்.பி., ஜோஷ் தங்கையா, கூடுதல் எஸ்.பி., பிரேமானந்தன், டி.எஸ்.பி., செல்வராஜ், கரூர் நகர இன்ஸ்பெக்டர் மணிவண்ணன் ஆகியோரை, டில்லிக்கு அழைத்து விசாரணை நடத்தினர்.

அதேபோல, த.வெ.க., முன்னணி நிர்வாகிகள் ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, நிர்மல்குமார் மற்றும் கரூர் மாவட்ட செயலர் மதியழகன் ஆகியோரிடமும் விசாரணை நடத்தினர். இரு தரப்பினரிடமும் தனித்தனியாக ஒன்பது மணி நேரத்திற்கு மேலாக விசாரணை நடத்தி வாக்குமூலம் பெற்றனர். அப்போது, கரூர் சம்பவத்தில், 41பேர் உயிரிழந்தற்கான காரணங்கள் குறித்து, சி.பி.ஐ., அதிகாரிகளிடம் தவெக நிர்வாகிகள் குற்றம் சுமத்தி இருந்தனர்.

இந்த வழக்கில் அடுத்தகட்ட நடவடிக்கையாக, தவெக தலைவர் நேரில் ஆஜராக சிபிஐ சம்மன் அனுப்பி உள்ளது. வரும் ஜனவரி 12ம் தேதி விஜய் நேரில் ஆஜர் ஆகி விளக்கம் அளிக்க வேண்டும் என சிபிஐ அதிகாரிகள் சம்மனில் குறிப்பிட்டு உள்ளனர்.

# தமிழக ஆளுநருடன் எடப்பாடி பழனிசாமி சந்திப்பு

சென்னை, ஜன.7-

தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவியை, அதிமுக பொதுச் செயலாளரும், தமிழக சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி இன்று (ஜன.6) காலை சந்தித்தார்.



இந்த சந்திப்பின்போது ஆளும் திமுக அரசுக்கு எதிராக மனு ஒன்றை அவர் ஆளுநரிடம் வழங்கினார்.

இது தொடர்பாக அதிமுக தலைமையகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும், தமிழக முன்னாள் முதல்வருமான எடப்பாடி பழனிசாமி இன்று (6.1.2026 ரூ செவ்வாய்க் கிழமை), சென்னை, லோக் பவனில் மேதகு தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவியை நேரில் சந்தித்தார்.

தமிழகத்தில் திமுக அரசு பொறுப்பேற்றதில் இருந்து தற்போதுவரை நடைபெற்றுள்ள பல்வேறு ஊழல்கள் குறித்து உள்ளடங்கிய பட்டியலை உரிய ஆதாரங்களுடன் நேரில் வழங்கினார்.

இந்நிகழ்வின்போது, அதிமுக துணைப் பொதுச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான கே.பி. முனுசாமி, பொருளாளரும், திண்டுக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான திண்டுக்கல் சீனிவாசன், துணைப் பொதுச் செயலாளரும், திண்டுக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான நத்தம் இரா. விசுவநாதன், தலைமை நிலையச் செயலாளரும், கோவை புறநகர் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான எஸ்.பி.வேலுமணி, கழக அமைப்புச் செயலாளரும், நாமக்கல் மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான பி. தங்கமணி, கழக அமைப்புச் செயலாளரும், வட சென்னை தெற்கு (கிழக்கு) மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான டி.ஜெயக்குமார், கழக அமைப்புச் செயலாளரும், விழுப்புரம் மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான சி.வி.சண்முகம், ஆகியோரும் உடனிருந்தனர். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக தமிழகம் வந்த உள்துறை அமைச்சர் அமித் ஷாவை அதிமுக சார்பில் எஸ்.பி.வேலுமணி உள்ளிட்ட அதிமுக நிர்வாகிகள் சந்தித்துப் பேசினர். நேற்று திருச்சியில் இரண்டாவது நாளாகவும் பேச்சுவார்த்தை நடந்தது. இதில் கூட்டணி விவகாரங்கள், தொகுதிப் பங்கீடு பற்றி ஆலோசிக்கப்பட்டதாக அதிமுக நிர்வாகிகள் கூறினர். இருப்பினும் அந்தப் பேச்சுவார்த்தையில் அமித் ஷா திருப்தியடையவில்லை என்றும் கூறப்படுகிறது.

இந்நிலையில், இன்று எடப்பாடி பழனிசாமி தலைமையில் அதிமுக முக்கிய நிர்வாகிகள் ஆளுநரை சந்தித்துள்ளனர்.

# அதிகார துஷ்பிரயோகத்தை திமுக அரசு நிறுத்தணும்: அண்ணாமலை வலியுறுத்தல்

சென்னை, ஜன.7-

திமுக அரசு இனியாவது தனது அதிகார துஷ்பிரயோகத்தை நிறுத்திக்கொண்டு, நீதிமன்ற தீர்ப்பினை மதித்து, முருக பக்தர்கள் தீபத் தூணில் தீபம் ஏற்ற அனுமதி வழங்க வேண்டும் என தமிழக பாஜ முன்னாள் தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.



அவரது அறிக்கை: திருப்பரங்குன்றம் சுப்பிரமணியசுவாமி திருக்கோவில் மலை மேல் உள்ள தீபத்தூணில் தீபம் ஏற்ற வேண்டும் என்ற, நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதனின் தீர்ப்புக்கு எதிரான திமுக அரசின் மேல்முறையீட்டையும், அது தொடர்பான பிற மனுக்களையும், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு, தள்ளுபடி செய்து தீர்ப்பளித்துள்ளது பெருமகிழ்ச்சியளிக்கிறது.

ஆண்டில் ஒரே ஒரு நாள், கோவில் பிரதிநிதிகளும், முருக பக்தர்களும் தீபத்தூணில் தீபம் ஏற்றினால், சட்டம் ஒழுங்கு சீர்குலையும் என்ற திமுக அரசின் வாதத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும், அப்படி ஏதேனும் சட்டம் ஒழுங்கு பிரச்னை ஏற்பட்டால், அது தமிழக திமுக அரசு திட்டமிட்டு உருவாக்கினால் மட்டுமே நடக்கும் எனவும், கடுமையாக விமர்சித்துள்ளது.

மேலும், திருப்பரங்குன்றம் மலையிலுள்ள தீபத் தூண், கோவிலுக்கே சொந்தமானது என்பதை, சென்னை உயர்நீதிமன்றம் உறுதி செய்துள்ளது. சட்டம் ஒழுங்கு என்ற போர்வையில், சமூகத்தில் பிரிவினையை ஏற்படுத்தும் திமுக அரசு மற்றும் அரசு அதிகாரிகளின் தன்னிச்சையான போக்கு, மிக ஆபத்தானது என்றும், அரசியல் லாபத்திற்காக திமுக அரசு, இத்தனை தூரம் தரம் தாழ்ந்து செல்லக் கூடாது என்றும், சென்னை உயர்நீதிமன்றம் திமுக அரசை எச்சரித்துள்ளது.

திமுக அரசு இனியாவது தனது அதிகார துஷ்பிரயோகத்தை நிறுத்திக்கொண்டு, சென்னை உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பினை மதித்து, முருக பக்தர்கள் தீபத் தூணில் தீபம் ஏற்ற அனுமதி வழங்க வேண்டும் என்று வலியுறுத்துகிறோம். இவ்வாறு அண்ணாமலை கூறினார்.



# திருந்தாத ஹிந்து விரோத திமுக அரசு துரத்தியடிக்கப்படும்

சென்னை, ஜன.7-

திருந்தாத ஹிந்து விரோத திமுக அரசு துரத்தியடிக்கப்படும் என தமிழக பாஜ தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.



அவரது அறிக்கை: திருப்பரங்குன்றம் தீபத்தூணில் தீபமேற்ற தடைவிதிக்கக் கோரும் திமுக அரசின் மேல்முறையீட்டு மனுக்களை நிராகரித்து, தீபமேற்ற அனுமதித்து, உயர்நீதிமன்ற மதுரைக் கிளை மீண்டும் ஒருமுறை நீதியை நிலைநாட்டியுள்ளது மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது.

சட்டம் ஒழுங்கு சீர்கெடும் என்னும் போலி பிம்பத்தைத் தங்கள் சொந்த வசதிக்கு ஏதுவாகப் பயன்படுத்துவது தவறானது எனத் திமுக அரசிற்கு சம்மட்டியடி கொடுத்து, தீபத்தூண் என்றும் திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலுக்கே உரித்தானது என்று ஆணித்தரமாக நிலைநாட்டிய நீதிமன்ற அமர்வுக்கு எனது உளமார்ந்த நன்றிகள்.

தொடர்ந்து பலமுறை நீதிமன்றத்திடம் குட்டு வாங்கியும் திருந்தாமல், திரும்பத் திரும்ப ஹிந்து விரோத விஷத்தை உமிழ்ந்து கொண்டே இருக்கும் திருந்தாத ஹிந்து விரோத திமுக அரசு தனது அராஜகக் கொட்டத்தாலேயே கோட்டையிலிருந்து துரத்தியடிக்கப்படும்.

அராஜக திமுக அரசின் கொட்டம் தேர்தலில் அடக்கப்படும். தீபத்தூணில் தீபமேற்றலாம் எனத் தீர்ப்பளித்து உயர்நீதிமன்ற மதுரைக்கிளை குட்டு வைத்த சில மணி நேரங்களுக்குள்ளேயே அத்தீர்ப்பை எதிர்த்து மேல்முறையிடுவோம் என மீண்டும் வீணாகக் குட்டிக்கரணம் அடிக்கத் தொடங்கி இருக்கிறது திமுக அரசு.

தீபமேற்றும் தமிழர் பண்பாட்டை முடக்க கங்கணம் கட்டிக் கொண்டுத் திரியும் திமுக அரசு, இன்னும் எத்தனை முறை நீதிமன்றத்தால் குட்டுப்பட்டால் திருந்தும்? எப்போது தான் தனது இந்து மத வெறுப்பைக் கைவிடும்? திரும்பத் திரும்ப விழுந்தும், மீசையில் மண் ஒட்டவில்லை என்ற கதையாக பாவலா செய்கிறது திமுக அரசு.

தனது பிரிவினைவாதப் போக்கிற்கு நீதிமன்றத்தில் சவுக்கடி வாங்கியது போதாதென்று, வரும் சட்டசபை தேர்தலில் தமிழக மக்களிடம் சம்மட்டி அடி வாங்கினால் தான் திமுக அரசு அடங்கும் போல! எல்லாம் இன்னும் 70 நாட்கள் தான். எத்தனை மேல்முறையீடு வேண்டுமானாலும் செய்து திமுக அரசு கதறட்டும். தமிழர் பண்பாட்டு விரோத திமுக அரசை வீழ்த்தி தீபத்தூணில் தீபமேற்றுவது 100% உறுதி. இவ்வாறு நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

# அமெரிக்காவின் சட்ட விரோத ஆக்கிரமிப்பு: வெனிசுலா இடைக்கால அதிபர் காட்டம்

கராகஸ், ஜன.7-

வெனிசுலாவின் இடைக்கால அதிபராக பொறுப்பேற்றுள்ள டெல்சி ரோட்ரிக்ஸ், 'அமெரிக்காவின் சட்ட விரோத ஆக்கிரமிப்பால் மக்கள் அடைந்துள்ள துன்பங்களுக்காக துக்கத்தில் இருப்பதாக' தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவுக்குள் போதை பொருட்களை கடத்துவதாக குற்றஞ்சாட்டி, அந்நாட்டு படைகளால் சிறைபிடிக்கப்பட்ட வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோ, 63, மற்றும் அவரது மனைவி சிலியா புளோரஸ், 69, ஆகியோர் நியூயார்க் சிறையில் அடைக்கப்பட்டனர். இதனால் துணை அதிபராக இருந்த டெல்சி ரோட்ரிக்ஸ் இடைக்கால அதிபராக நியமனம் செய்யப்பட்டார்.

அவர் பதவியேற்ற பிறகு கூறியதாவது: நான் துக்கத்துடன் இருக்கிறேன். எங்கள் நாட்டின் மீதான சட்டவிரோத ராணுவ ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து வெனிசுலா மக்கள் அனுபவித்த துன்பங்களுக்கு நான் வருத்தம் அடை கிறேன். இரண்டு ஹீரோக்கள் கடத்தப்பட்டு இருக்கின்றனர். இவ்வாறு டெல்சி ரோட்ரிக்ஸ் கூறினார்.இடைக்கால அதிபர் டெல்சி யார்?

* டெல்சி ரோட்ரிக்ஸ், 56, வெனிசுலாவின் துணை அதிபராக இருந்தவர்.* இவர் 1970களில் புரட்சிகர லிகா சோஷலிச கட்சியை நிறுவிய ஜார்ஜ் அன்டோனியோ ரோட்ரிக்சின் மகள்.* வெனிசுலா மக்களிடையே இவருக்கு என்று தனி செல்வாக்கு உள்ளது. அதிபர் மதுரோவின் தீவிர விசுவாசி.துப்பாக்கிச்சூடுஅமெரிக்காவால் அதிபர் நிக்கோலஸ் மதுரோ கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து, துணை அதிபர் டெல்சி ரோட்ரிக்ஸ் இடைக்கால அதிபராகப் பதவியேற்ற சில மணி நேரங்களுக்குப் பிறகு, வெனிசுலாவின் கராகஸில் துப்பாக்கிச்சூடு நடந்துள்ளது. வெனிசுலாவில் அதிபர் மாளிகை மீது அடையாளம் தெரியாத ட்ரோன்கள் பறந்ததை அடுத்து பாதுகாப்புப் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.கராகஸில் பலத்த துப்பாக்கிச் சத்தங்கள் கேட்டன. ட்ரோன் அல்லது விமான சத்தங்களும் இருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சில பகுதிகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. தற்போது நிலைமை கட்டுக்குள் உள்ளது.துப்பாக்கிச் சூட்டில் அமெரிக்கா ஈடுபடவில்லை என்று வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

# திருச்சிராப்பள்ளி மாவட்டதமிழ்நாடு காவல்துறை அமைச்சுப் பணியாளர் சங்க நிர்வாகிகள் தேர்வு

திருச்சி. ஜன 07-

புதிய நிர்வாகிகள் தேர்வு 2026 2028, ஆண்டுக்கான தமிழ்நாடு காவல்துறை அமைச்சுப் பணியாளர் சங்கம் திருச்சிராப்பள்ளி மாநகரம் புதிய நிர்வாகிகள் தேர்வு. தலைவராக கணேசன், செயலாளராக முருகன், துணை தலைவராக ரமேஷ்பாபு, பொருளாளராக அம்மையர் ஹேமா சௌத்திரி, மத்திய செயற்குழு உறுப்பினராக ஆரோக்கியராஜ், கணேசன் முன்னிலையில் தேர்வு செய்யப்பட்டுள்ளார்கள் என்பதை தமிழ்நாடு காவல்துறை அமைச்சுப் பணியாளர் சங்க மத்திய செயற்குழு உறுப்பினர் ஆரோக்கியராஜ் தெரிவித்துள்ளார்

# வெனிசுலா அதிபராக பதவியேற்ற சத்யசாய்பாபா பக்தர்

புதுடில்லி, ஜன.7-

வெனிசுலா அதிபராக பொறுப்பு ஏற்றுள்ள டெல்சி ரோட்ரிக்ஸ் பகவான் சத்யசாய்பாபாவின் பக்தர் என்பது தெரியவந்துள்ளது. அவர் இரண்டு முறை, புட்டபர்த்தியில் உள்ள பிரசாந்தி நிலையம் வந்து சென்றது தெரியவந்துள்ளது.



வெனிசுலா அதிபராக இருந்த நிக்கோலஸ் மதுரோ மற்றும் அவரது மனைவியை அமெரிக்க படையினர், அந்நாட்டிற்குள் நுழைந்து தாக்குதல் நடத்தி கைது செய்து நியூயார்க் கொண்டு சென்றுள்ளனர். இதனையடுத்து துணை அதிபராக இருந்த டெல்சி ரோட்ரிக்ஸ், இடைக்கால அதிபராக பதவியேற்றுள்ளார்.

இந்நிலையில், டெல்சி ரோட்ரிக்ஸ், பகவான் சத்யசாய்பாபாவின் பக்தர் என்பது தெரியவந்துள்ளது. சத்யசாய் மத்தயி அறக்கட்டளை மற்றும் பேஸ்புக் பக்கங்களில் ஆந்திராவின் புட்டபர்த்தியில் உள்ள பிரசாந்தி நிலையத்திற்கு 2023 ஆக.,5 மற்றும் 2024 அக்., 26 ஆகிய நாட்களில் அவர் இரண்டு முறை வந்து சென்றுள்ளார்.

2023ம் ஆண்டு இந்தியாவில் நடந்த ஜி20 மாநாட்டின் போது வெனிசுலா குழுவினரில் ஒருவராக வந்தார்.பிறகு 2024ம் ஆண்டு அவர் வந்த போது வெனிசுலாவின் துணை அதிபர் பதவியில் இருந்தார். பிரசாந்தி நிலையத்துக்கு அவருடன், இந்தியாவுக்கான வெனிசுலா அதிபர் சபாயா ரோட்ரிக்சும் உடன் வந்தார்.ஆந்திரா வந்த டெல்சி ரோட்ரிக்சை, ஸ்ரீசத்யசாய் மத்திய அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் ஆர்ஜே ரத்னாஹர் வரவேற்று இருந்தார்

# 2026 வெற்றி ஆண்டாகட்டும்

சென்னை, ஜன.7-

இனிதாய் தொடங்கி இருக்கிறது புத்தாண்டு. பழமையும் புதுமையும் கைகோத்து அடியெடுத்து வைக்கும் இந்தப் புத்தாண்டின் தொடக்கம் உற்சாகத் தையும் உத்வேகத்தையும் தருகிறது. எப்படி இருந்தது 2025ஆம் ஆண்டு என்பதற்கான மாணவர்களின் பதில்கள் விதவிதமாய் இருக்கின்றன. வித்தியாசமாக இருக்கிறது.




மிதிவண்டி ஓட்டக் கற்றுக்கொண்டேன். கணினி இயக்க கற்றுக்கொண்டேன். உண்டியலில் சேமிக்கக் கற்றுக்கொண் டேன். நூலகத்தில் உறுப்பினர் ஆனேன். இதுவரை அறியாத புத்தகங்களை அறிந்தேன். பாடம் சார்ந்த தகவல்களைத் திரட்ட பள்ளி நூலகத்துக்குச் சென்றபோது புதியபுதிய புத்தகங்களைப் பார்த்தேன். நாள்தோறும் செய்தித்தாள்கள் படித்தேன் இப்படி.

முன்னேறும் மூவர்: மிக முக்கிய செய்திக் குறிப்புகளைத்தனி நோட்டில் எழுதி வைத்துக்கொண் டேன். செய்திகளின் மூலமாக குகேஷ், பிரக்ஞானந்தா, வைஷாலி, சிம்பொனி இசை தந்த இளையராஜா, விண் வெளிக்குச் சென்ற ஷுபன்ஷு சுக்லா, இஸ்ரோவின் 100வது ராக்கெட், உலகளாவிய மாநாடுகள், ஈட்டி எறிந்து சாதித்த நீரஜ் சோப்ரா போன்ற சாதனையாளர்களை அறிந்தேன்.

முதல் முறையாகக் கலைத் திருவிழாவில் பங்கேற்றேன். பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டிகளில் பரிசு பெற்றேன். வாரந்தோறும் வாசிப்பு இயக்க நூல்கள் படித்தேன். விநாடி வினா நிகழ்வில் பங்கேற்றேன். ஆண்டு விழா நிகழ்ச்சியில் எனது திறமையை வெளிப்படுத்தினேன் எனப் பதில்கள் தொடர்கின்றன.

2025இல் ஆசிரியர்களும் தொல்லியல் சுற்றுலா, அறிவியல் கண்காட்சி, சுற்றுச்சூழல் மன்றம் முதலான முன்னெடுப்புகளின் வழியாக தாங்கள் பெற்ற விழிப்புணர்வு, படிப்பிலும் விளையாட்டிலும் தங்களின் மாணவர்கள் வெற்றி பெற தாம் அளித்த வழிகாட்டுதல்களை வரிசைப்படுத்துகிறார்கள்.

சரிவிகித உணவு அளிப்பது, உடற்பயிற்சியை ஊக்குவிப்பது போன்ற செயல்பாடுகளின் மூலம் தங்கள் குழந்தைகளின் முன்னேற்றத்தில் முன்கைக்காட்டிலும் பெரும் பங்கு வகிப்பவராகப் பெற்றோர் பலர் மாறி யிருக்கிறார்கள். பள்ளி மேலாண்மைக் கூட்டத்தில் பங்கு பெற்று மாணவர் வளர்ப்பிலும் பள்ளி வளர்ச்சியிலும் துணைநிற்கிறார்கள்.

நற்பண்புகளைக் கொண்ட மாண வர்களை உருவாக்குவதில் ஆசிரியர், பெற்றோர், சமூகத்தின் வழிகாட்டியாக வெளிவரும் சில செய்தித்தாள்களும் தங்களின் பங்களிப்பைத் தொடர்வது நல்ல சமூகத்தின் அடையாளமாகும். 2026லும் இது தொடர வேண்டும்.

சாதனை முகம்: பள்ளியிலும் வீட்டிலும் தேசத் தலை வர்கள் படங்களைச் சுவரில் மாட்டும் வழக்கம் சில காலம் முன்புவரை இருந்த ஒன்று. சமகாலத்தில் பல்வேறு துறை சார்ந்த சாதனையாளர்களின் படங்களை வீட்டிலும் பள்ளியிலும் காட்சிப்படுத்தலாம். மாணவச் செல்வங் கள் உயரிய மனிதர்களின் பண்புகள், சாதனைகளைக் கண்டு பின்பற்ற அது ஊக்க சக்தியாக அமையும்.

எதை நாள்தோறும் பார்க்கிறோமோ, எதை நாள்தோறும் செய்கிறோமோ அதுவே பழக்கமாகி வாழ்வில் தொடர்வதைப் போல சாதனையாளர்களை நாள்தோறும் பார்த்தும் படித்தும் அவரவர் சார்ந்த விருப்ப துறைகளில் வெற்றி பெறத் துணைநிற்கும்.

புத்தாண்டில், தாங்கள் வசிக்கும் பகுதிக்கு அருகில் உள்ள தொல்லியல் தளங்கள், அருங்காட்சியகங்கள், நூல கங்கள், அறிவியல் காட்சி மையங்களுக்கு வார இறுதியில் குழந்தைகளைப் பெற்றோர் அழைத்துச் செல்லும் புதிய பழக் கத்தை ஏற்படுத்தலாம். பரந்துவிரிந்த உலகம் பற்றிய விசாலமான பார்வை யைக் குழந்தைகளுக்கு ஊட்ட இது துணைபுரியும்.

தொடக்கப் பள்ளி மாணவர் களுக்குச் சிறார் பாடல்களை அறிமுகப் படுத்துவதைப் போலவே உலகின் தலை சிறந்த இசையை அறிமுகப் படுத்துவதும் நல்லது. பள்ளிக்கூடம், வீடு, சமூகம் என அனைத்திலும் நல்ல காட்சிகள், நல்ல அறங்களின் சாட்சிகள் அடுத்தடுத்த தலை முறையைச் சிறந்ததாக ஆக்கட்டும். 2026 அனைவருக்கும் வெற்றி ஆண்டாகட்டும்.



■ தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில்மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், மக்கள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொது மக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடம் கோரிக்கை மனுக்களை பெற்று மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.



■ தென்காசி மாவட்டம், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மேலப்பாவூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில், தென்காசி மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் துணிநூல் துறை ஆணையாளர் இரா.லலிதா,. இ.ஆ.ப குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு திட்டத்தில் 202526 பயனாளி வீடு கட்டப்பட்டு வரும் ரூ 36 இலட்சம் மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறை கட்டடம் கட்டப்பட்டு வரும் திட்டப்பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



# விடிவு காலம் வருமா கொடைக்கானலுக்கு?

திண்டுக்கல், ஜன.7-

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் அதிக அளவில் மக்கள் விரோத செயல்கள் நடந்து வருகின்றன. குப்பைத்தொட்டிகள் அமைந்திருக்கும் இடத்தை இரவோடு இரவாக கொடைக்கானல் மலையில் தடை செய்யப்பட்ட ஜேசிபி இயந்திரங்களைக் கொண்டு காலி செய்து இரும்பிலான கடைகள் தயாராகி வருகிறது. மேலும் தங்களது சொந்த வீட்டிற்கு பில்லர் அமைப்பதற்காக வரிப்பணத்தில் கட்டிய குடிநீர் தொட்டி உடைக்கப்பட்டு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு வருகின்றது. இதற்கு அனுமதி அளித்தது யார். மக்கள் விரோத செயல்கள் நடந்தும் அரசு அதிகாரிகளும் சம்பந்தப்பட்ட நிர்வாகமும் நடவடிக்கை எடுக்காத ஏன்? மேலும் கொடைக்கானல் தடை செய்யப்பட்ட கனரக வாகனங்கள் இரவில் இயக்குவது அதிகாரிகளுக்கு தெரிவது இல்லையா? அல்லது தெரிந்தும் கண்டு கொள்வது இல்லையா? மேலும் கொடைக்கானலில் பாறைகள் ஆங்காங்கே உடைக்கப்பட்டு வருவது கோட்டாட்சியர் அவர்களுக்கு தெரியாதா? மேலும் அரசு நிலங்கள் தனியார் ஆக்கிரமைப்புகளில் உள்ளது அரசு அலுவலர்களுக்கு தெரியாதா? அனைத்து விஷயங்களும் தெரிந்து இருந்தாலும் அரசு அதிகாரிகளும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் எதனையும் கண்டுகொள்ளாமல் இருப்பதின் பின்னணி என்ன? கொடைக்கானல் தாலுகாவில் உள்ள அனைத்து துறை சார்ந்த அலுவலர்களும் நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலையிடுவாரா? கொடைக்கானலை காப்பாற்ற வழிவகை செய்யப்படுமா? என்பது போன்ற பல கேள்விகள் உள்ளூர் பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் இடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தி வருகிறது விடிவு காலம் வருமா கொடைக்கானலுக்கு?



# திசையன்விளை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக கல்லூரியில் ஆங்கில பேசும்திறன் மற்றும் கர்சிவ் எழுத்து பயிற்சி பட்டறை

திசையன்விளை ஜன 7-

திசையன்விளை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கல்லூரியில் ஆங்கில பேசும்திறன் மற்றும் கர்சிவ் எழுத்து பயிற்சி பட்டறை சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியின் தொடக்கமாக கல்லூரி முதல்வர் முனைவர் து லில்லி அவர்கள் வரவேற்புரை மற்றும் தலைமை உரை ஆற்றினார் . அதனைத் தொடர்ந்து உடற்கல்வி இயக்குனர் முனைவர் கு சந்திரசேகர் அவர்கள் சிறப்பு விருந்தினரின் அறிமுக உரையை ஆற்றினார் இந்நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக சர்வதேச பயிற்சியாளர் திரு அருள் ஃபெலிக்ஸ், கலந்து கொண்டு மாணவ மாணவிகளுக்கு ஆங்கிலம் பேசும்திறன் மற்றும் கர்சிவ் எழுத்தின் முக்கியத்துவத்தை பற்றி சிறப்புரையாற்றி பயிற்சியும் வழங்கினார். இந்நிகழ்ச்சியை தமிழ்த் துறை பேராசிரியர் முனைவர் பாலகிருஷ்ணன் அவர்கள் தொகுத்து வழங்கினார். வணிகவியல் துறைத்தலைவர் முனைவர் த.ஒயிட்டன் சகாயராஜ் அவர்கள் நன்றியுரை வழங்கினார். இந்நிகழ்சிக்கான ஏற்பாடுகள் அனைத்தையும் கணிதவியல் துறை பேராசிரியர் சுப்பிரமணியன் செய்திருந்தார். மேலும் இந்நிகழ்ச்சியில் அனைத்து துறை தலைவர்கள், பேராசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் மாணவ மாணவிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.



# ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு சால்வை அணிவித்து பிறந்தநாள் வாழ்த்து பெற்றார்

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு சால்வை அணிவித்து பிறந்த நாள் வாழ்த்து கூறினார்

சின்னாளபட்டி, ஜன 07-

ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு சால்வை அணிவித்து பிறந்தநாள் வாழ்த்து பெற்றார். துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு சால்வை அணிவித்து பிறந்த நாள் வாழ்த்து கூறினார்.

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்ற தொகுதியில் 1989ம் ஆண்டு முதல் இன்று வரை போட்டியிட்டு வெற்றிகண்டு வரும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் ஆத்தூர் தொகுதியிலர் முடிசூடா மன்னனாக உள்ளார். ஜனவரி 6ம் தேதி தனது பிறந்த நாளை முன்னிட்டு அதிகாலை 7.00 மணி அளவில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இல்லத்திற்கு சென் அவருக்கு சால்வை அணிவித்து வாழ்த்து பெற்றார். தமிழக முதல்வரும், அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு சால்வை அணிவித்து பிறந்தநாள் வாழ்த்து கூறினார்.

அதன்பின்னர் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் இளைஞர் நலம் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சரும், துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேரில் சந்தித்து பிறந்த நாள் வாழ்த்து பெற்றார். நிகழ்ச்சியின்போது திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் மதுரை தனசெல்வம், ஐ.பி வேல்முருகன், திமுக நிர்வாகி ரெக்ஸ் மற்றும் திமுக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர். அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு பிறந்த நாள் சொல்ல தேனி, மதுரை, திண்டுக்கல், திருச்சி மற்றும் பல மாவட்டங்களில் இருந்து கட்சி நிர்வாகிகள் அவரது இல்லத்தில் குவிந்த வண்ணம் இருந்தனர்.



# ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களின் பிறந்தநாள் விழா ஒன்றிய செயலாளர் பிள்ளையார்நத்தம் முருகேசன் திமுக கொடியெற்றி இனிப்புகள் வழங்கி கொண்டாட்டம்

சின்னாளபட்டி, ஜன 07-

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் கிழக்கு ஒன்றியம் சின்னாளபட்டியில் திமுக மாநில துணைப் பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ஆத்தூர் தொகுதி முழுவதும், திமுகவினர் இனிப்பு வழங்கி கொண்டாடி வருகின்றனர். சின்னாளபட்டியில் ஆத்தூர் கிழக்கு ஒன்றிய திமுக செயலாளர் பிள்ளையார்நத்தம் முருகேசன் தலைமையில், திமுகவினர் காந்திமைதானத்திலிருந்து ஊர்வலமாக வந்து, காமராஜர் சாலையில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்தும், கலைஞரின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்கள். அதன் பின்னர் பொதுமக்களுக்கு இனிப்புகளும், முட்டை பிரியாணியும் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் சின்னாளபட்டி பேரூர் கழக திமுக பொறுப்பாளர் டி.பாலகிருஷ்ணன், பேரூராட்சி மன்ற தலைவர் பிரதீபா கனகராஜ், துணைத்தலைவர் ஆனந்தி பாரதிராஜா, முன்னாள் துணைத்தலைவர் எம்.வி.முருகன், முன்னாள் பேரூர் கழக செயலாளர்கள் எஸ்.கே.துரை, மோகன்ராஜ், மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் முத்துவேல், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் பி.என்.போஸ் இளைஞரணி அமைப்பாளர் வினோத் ஒச்சப்பன், துணை அமைப்பாளர்கள் ரவி, தாமோதரன், மணிமாறன், ஒன்றிய பிரதிநிதிகள் வடக்கு தெரு சந்திரன், தங்கப்பாண்டி, திமுக நிர்வாகிகள் தொப்பி பொம்மையா, சுகுமாறன், சாந்திவிஜயன், சில்லி முருகன், நம்பர் ஒன் மணிகண்டன மற்றும் பேரூராட்சி வார்டு உறுப்பினாகள், பேரூர் கழக பொறுப்பாளர்கள், திமுக சார்பு அணி நிர்வாகிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.



■ மதுரை மாவட்டம் தோடனேரி ஊராட்சி கள்ளிக்குடி கிராமத்தில் தோட்டக்கலை மற்றும் மலை பயிர்கள் துறை சார்பில், தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் கீழ் ரூபாய் 16.88 லட்சம் மானியத் தொகையில் அமைக்கப்பட்டுள்ள பசுமைக் குடிலில் பயிரிடப்பட்டுள்ள செடிகளை மாவட்டஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன்குமார் பார்வையிட்டார்தோடனேரி ஊராட்சி கள்ளிக்குடி கிராமத்தில் ஊரக வளர்ச்சித்துறையின் கீழ், பல்வேறு அரசுத்திட்டங்களின் கீழ் கடந்த 2001ம் ஆண்டுக்கு முன் கட்டப்பட்டு, தற்போது சீரமைக்க முடியாமல் மிகவும் பழுதடைந்த வீடுகளுக்கு பதில் புதிய வீடுகள் கட்டும்‘முதலமைச்சரின் வீடுகள் மறு கட்டுமான திட்டம் கீழ் புதிய வீடு கட்டப்பட்டு வருவதை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன்குமார் பார்வையிட்டார்.மதுரை மாவட்டம் பரவை பேரூராட்சிக்கு உட்பட்ட ஊர்மெச்சிகுளம் கிராமத்தில் செயல்பட்டு வரும் மீன் வளர்ப்பு பண்ணையைமாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன்குமார் பார்வையிட்டார்.



■ திண்டுக்கல் மாவட்டம் பழனியின் குடிநீர் ஆதாரமாக விளங்கும் கொடைக்கானல் நட்சத்திர ஏரியில் ஏரியை சுற்றியுள்ள தங்கும் விடுதிகள் மற்றும் கழிப்பறைகளில் இருந்து வரும் கழிவுநீர் ஏரியில் கலப்பதோடு மட்டுமல்லாமல் தெரேசா நகர் மூஞ்சிக்கள் மற்றும் அரசு உயர்நிலைப்பள்ளி என அனைத்து சுற்றுப்புறங்களில் உள்ள விடுதிகளில் இருந்தும் வரும் கழிவுநீரானது ஒன்றாக கலந்து வெள்ளி நீர்வீழ்ச்சி வழியாக பழனி சென்றடைகின்றது. பல லட்சம் குடும்பங்கள் பயன்படுத்தும் இந்த நீரில் இவ்வளவு கழிவுநீர் கலப்பதால் மிகப்பெரிய அளவில் நோய் தொற்று ஏற்படும் அபாயம் உள்ளது. ஆகவே மாவட்ட நிர்வாகம் இதற்காக சரியான கட்டுப்பாடுகள் மற்றும் நெறிமுறைகளை தேர்ந்தெடுத்து கொடைக்கானல் சுற்றுச்சூழலையும், நீர் ஆதாரங்களையும், நீரோட்டங்களையும், ஏரியையும் பாதுகாத்து தருமாறு பொதுமக்களும், சமூக ஆர்வலர்களும் கோரிக்கை வைக்கின்றனர்.

# பாகிஸ்தானுக்காக உளவு பார்த்த 15 வயது சிறுவன் சிக்கினான்

சண்டிகர், ஜன.7-

பாகிஸ்தானுக்காக உளவு பார்த்த ஜம்மு காஷ்மீரைச் சேர்ந்த 15 வயது சிறுவனை பஞ்சாப் போலீசார் கைது செய்து, விசாரித்து வருகின்றனர்.இந்தியா குறித்து தகவல்கள் பாகிஸ்தானுக்கு பரிமாறப்பட்டு வருவதாக உளவுத்துறையினர் அளித்த தகவலைத் தொடர்ந்து ஜம்மு காஷ்மீரின் சம்பா மாவட்டத்தை சேர்ந்த 15 வயது சிறுவனை, பஞ்சாப் மாநிலம் மதோபூர் பகுதியில் வைத்து போலீசார் கைது செய்தனர்.அந்தச் சிறுவனிடம் இருந்த மொபைல்போனை பறித்து ஆய்வு செய்ததில் முக்கியமான தகவல்கள், போட்டோக்கள் மற்றும் வீடியோக்களை பாகிஸ்தான் ராணுவத்திடம் பரிமாறிக் கொண்டது தெரியவந்துள்ளது. மேலும்,இந்திய ராணுவம் மற்றும் பாதுகாப்பு தளவாடங்கள் குறித்த தகவல்களை பாகிஸ்தானின் உளவு அமைப்புக்கு அளித்துள்ளதுடன், போதை மருந்து கடத்தல்காரனுடன் தொடர்பில் இருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டது.

பதன்கோட் எஸ்எஸ்பி தில்ஜிந்தர் சிங் தில்லான் கூறியதாவது: இந்த சிறுவன், பாகிஸ்தானை தளமாக கொண்ட பயங்கரவாத குழுக்களுடன் கடந்த ஒரு ஆண்டுக்கும் மேலாக தொடர்பில் உள்ளான். தொழில்நுட்பத்தில் ஆர்வம் மிகுந்த இவன், முக்கியமான தகவல்களை பரிமாறிக்கொண்டு உள்ளான். இவன் பிடிபடாமல் இருந்திருந்தால்,பெரும் அச்சுறுத்தலாக மாறியிருப்பான் எனக்கூறியுள்ளார்.

பாகிஸ்தானுடன் தொடர்புடைய பயங்கரவாத குழுக்களின் வலையில் இன்னும் சில சிறுவர்கள் சிக்கியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது. அவர்களை அடையாளம் கண்டு பிடிக்கும் பணியில் போலீசார் ஈடுபட்டுள்ளனர்.

# இலத்தூரில் தமிழக வெற்றிக் கழகம் செங்கோட்டை கிழக்கு ஒன்றிய அலுவலகம் திறப்பு விழா நியாஸ் பங்கேற்பு

தென்காசி : ஜன 07-.

தென்காசி மாவட்டம் தமிழக வெற்றி கழகத்தின் மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட செங்கோட்டை கிழக்கு ஒன்றிய அலுவலகம் திறப்பு விழா இலத்தூரில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இந்த விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட தென்காசி மேற்கு மாவட்ட கழக செயலாளர் N.நியாஸ் NJSR செங்கோட்டை கிழக்கு ஒன்றிய அலுவலகத்தினை ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். பின்னர் குத்து




விளக்கு ஏற்றி வைத்து சிறப்புரையாற்றினார். தொடர்ந்து விழாவில் கலந்து கொண்ட மாவட்ட செயலாளருக்கு ஒன்றிய கழக செயலாளர் ட. பரமசிவன் பொன்னாடை அணிவித்து நினைவு பரிசு வழங்கினார்.

இந்த விழாவில் தமிழக வெற்றி கழகத்தின் மாவட்ட இணைச் செயலாளர் முத்தையா, துணை செயலாளர் மாரிமுத்து, மாவட்ட கழக பொருளாளர் VTA சிவசங்கர், மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் மருத்துவர் வாசுதேவி, தொண்டர் அணி அமைப்பாளர் காந்தி, மாவட்ட நிர்வாகி எஸ். வேல்துரை, மாவட்ட நிர்வாகி மணவாளன், செங்கோட்டை ஒன்றிய இணைச் செயலாளர் SHARPராஜா, நகர நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், மாவட்ட இளைஞரணி நிர்வாகிகள், மகளிர் அணி நிர்வாகிகள், மற்றும் ஒன்றிய நிர்வாகிகள், கிளைக் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர். முன்னதாக நான்கு முக்கு ரோடு சந்திப்பில் இருந்து நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வருகை தந்த மேற்கு மாவட்ட செயலாளர் நியாஸ்க்கு கிழக்கு ஒன்றிய செயலாளர் ட. பரமசிவன் தலைமையில் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் மேள தாள முழங்க பட்டாசு வெடித்து சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. விழாவின் நிறைவில் பங்கேற்ற அனைத்து கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்களுக்கு சிறப்பான மதிய விருந்து வழங்கப்பட்டது.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000